தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 14 ஆயிரம் கன அடியாக உயர்வு

கர்நாடகத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகளில் இருந்து கூடுதலாக உபரி நீர் திறந்துவிடப்படுகிறது. இதையடுத்து, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை நொடிக்கு 14,302 கன அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து பாசனத்துக்காக நொடிக்கு 12,300 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர்வரத்தை விட திறந்துவிடப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் மெல்ல உயரத் தொடங்கியுள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 87.84 அடியாக இருந்தது. நீர் இருப்பு 50.21 டி.எம்.சியாக இருந்தது. ஒகேனக்கல்லில்... ஒகேனக்கல் காவிரி ஆற்றில் புதன்கிழமை நொடிக்கு 20 ஆயிரம் அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை 22 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் பிரதான அருவி, ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. நீர்வரத்தை மத்திய நீர் ஆணைய அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### சம்பா நெல் சாகுபடிக்கு பயிர்க் காப்பீடு:நவ.15-க்குள் செலுத்த வேண்டும்

சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கடன் பெறாத விவசாயிகள் நவ.15 ஆம் தேதி வரை பிரீமியம் செலுத்தலாம். இதுகுறித்து இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனத்தின் தலைமை மண்டல மேலாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி: தமிழகத்தில் உள்ள

அனைத்து மாவட்டத்திற்கும் சம்பா நெல் சாகுபடிக்கு வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்படும். சம்பா நெல் சாகுபடிக்கு கடன் பெறாத விவசாயிகள் இத் திட்டத்தில் பிரீமியம் செலுத்த கடைசி தேதி நவ.15 ஆகும். சிறு, குறு விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ.12 ஆயிரத்து 800 என மதிப்பிடப்பட்டு, இதில் 55 சதவீதம் மானியம் போக ரூ.115.20 பிரீமியமாகச் செலுத்த வேண்டும். பிற கடன் பெறாத விவசாயிகள் ஏக்கருக்கு பிரீமியமாக ரூ.128 செலுத்த வேண்டும். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெற்று முன்மொழிவுப் படிவத்துடன் பிரீமியத்தை தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் செலுத்த வேண்டும். பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் கடன் பெறும் வங்கியின் மூலமாகவே சேர்க்கப்படுவர். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண் துறையிலோ, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியிலோ கேட்டுப் பெறலாம். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார பிர்காவிலும் அரசின் வேளாண் துறையினால் பயிர் அறுவடை காலத்தில் ஆய்வு செய்யப்படும். நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டுகால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும்போது நடப்பு பருவ மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அதற்கேற்ப அந்த வட்டாரத்தில் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படுமாயின், பிரீமியம் பெறுவது கடைசி தேதிக்கு முன்பே நிறுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உரங்கள் பயன்பாடு: விவசாயிகளுக்கு அறிவுரை

அனைத்து நிறுவன உரங்களும் சட்ட விதிமுறைப்படி, ஊட்டச்சத்து வைத்து தயாரிக்கப்படுவதாகவும், ஒரே நிறுவனத்தின் உரத்தை விரும்புவதால் விலையேற்றத்துக்கு வழிவகுக்கும் என விவசாயிகளுக்கு வேளாண்மைத்

துறை விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் விடுத்துள்ள செய்தி: விவசாயிகளிடையே உரங்கள் பயன்பாடு குறித்து தவறான புரிதல் ஏற்பட்டுள்ளது. ஒரு நிறுவன உரங்கள் மட்டுமே உயர்வானது எனவும், பிற நிறுவன உரங்கள் தரம் குறைவாக இருப்பதாகக் கருதுகின்றனர். அனைத்து உரங்களும் உரக்கட்டுப்பாட்டு ஆணை உத்தரவுப்படி, தகுந்த ஊட்டச்சத்து அளவு உள்ளதாக இருக்கவேண்டும். இதன்படியே அனைத்து நிறுவனங்களும் உரங்களைத் தயாரிக்கின்றன. யூரியாவில் 46 சதவீத தழைச்சத்து, டிஏபியில் 18 சதவீதம் தழைச் சத்து, 46 சதவீதம் மணிச்சத்து, பொட்டாஷில் 60 சதவீதம் சாம்பல் சத்து இருக்க வேண்டும் என்பது சட்டப்படியானது. இவைத்தவிர எந்த நிறுவனமும் கூடுதலாகவோ, குறைவாகவோ ஊட்டசத்து நிர்ணயித்து தயாரிக்கமுடியாது. எனவே, ஒரு நிறுவனத்தின் உரத்துக்காக விவசாயிகள் யாரும் காத்திருக்க வேண்டியதில்லை. மேலும், குறிப்பிட்ட நிறுவன உரங்களையே விரும்பினால் விலையேற்றமும், கள்ளச் சந்தைக்கான வாய்ப்பும் உருவாகும். இவற்றைத் தவிர்த்திட விவசாயிகள், தாங்கள் விரும்பிய நிறுவன உரங்கள் கிடைக்காவிட்டால் இதர நிறுவன உரங்களை பயன்படுத்தவேண்டும். அனைத்து உரங்களும் சமமானவையே. திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் அனைத்தும் தனியார் உரக்கடைகள் மட்டுமின்றி, கூட்டுறவுச் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## <u>திருவாரூரில் பலத்த மழை</u>

திருவாரூரில் வியாழக்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. திருவாரூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மதியம் லேசான

மழையும், புதன்கிழமை திருத்துறைப்பூண்டியில் பலத்த மழையும், முத்துப்பேட்டை, மன்னார்குடி உள்ளிட்ட சில இடங்களில் லேசான மழையும் பெய்தது. வியாழக்கிழமை காலையில் அதிக வெயில் இன்றி மிதமான வகையில் குளிர்ந்த காற்று வீசியது. மதிய வேளையில் வெயில் சற்று அதிகமானபோது, மாலை 4 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இதேபோல், குடவாசல், நன்னிலம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல இடங்களில் மழை பெய்தது. இந்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குடவாசலில் 25.40 மில்லி மீட்டர் மழை: மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்) வருமாறு: குடவாசல் - 25.40, நீடாமங்கலம் - 23.20, திருத்துறைப்பூண்டி - 8.20, நன்னிலம் - 5.20, வலங்கைமான் - 2.20, முத்துப்பேட்டை 1.

## <u>பெங்களூருவில் பலத்த மழை</u>

பெங்களூருவில் புதன்கிழமை இரவு முழுவதும் பெய்த பலத்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. பெங்களூருவில் புதன்கிழமை இரவு தொடங்கி வியாழக்கிழமை அதிகாலை வரை பலத்த மழை பெய்தது. இதனால், மாநகரில் பல்வேறு இடங்களில் தாழ்வானப் பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. முக்கிய சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. மடிவாளா, ஆடிகோடி, பி.டி.எம்.லேஅவுட், காந்திநகர், நந்தினி லேஅவுட், விஜயநகர், ஜெயநகர், ஜே.பி.நகர், கெங்கேரி, ஆனேபாளையா, கே.பி.அக்ரஹாரா, சேலூர்பாளையா உள்ளிட்ட பகுதியில் மழை நீர் வீடுகளில் புகுந்ததால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். கே.ஆர்.புரத்தில் ஏரி உடைந்ததால், மழை வெள்ளம் வீடுகளில் புகுந்தது.

மைசூர் சாலையில் சாக்கடை கால்வாய் நீர் காளி ஆஞ்சநேயா கோயிலில் புகுந்தது. பலத்த மழையால் பெங்களூருவில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதுகுறித்து மேயர் சாந்தகுமாரி வியாழக்கிழமை கூறியது:

அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் ஒரு சில நாள்கள் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், பொதுமக்கள் பாதிக்காத வகையில் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். பேட்டியின் போது, துணை மேயர் ரங்கண்ணா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>எருமப்பட்டியில் 20 மி.மீ., மழை</u>**

நாமக்கல்: நாமக்கல் அடுத்த எருமப்பட்டியில், அதிகபட்சமாக நேற்று முன்தினம், 20 மில்லி மீட்டர் மழை பதிவானது. நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம், பரவலாக மழை பெய்தது. அதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பல இடங்களில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. பகல் நேரத்தில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மகிழ்ச்சி அடைந்தனர். சாலை மற்றும் சாக்கடையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திடீரென பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில், அதிகபட்சமாக, எருமப்பட்டி, 20 மி.மீ., நாமக்கல், 0.5 மி.மீ., ப.வேலூர், 2 மி.மீ., சேந்தமங்கலம் மற்றும் ராசிபுரம், தலா, 1.6 மி.மீ., மங்களபுரம், 18.3 மி.மீ.,

என, 44 மி.மீ., மழை பெய்த நிலையில், சராசரியாக, 4.4 மி.மீ., மழை பதிவானது. கடந்த, சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், மாவட்டம் முழுவதும் குளிர்ச்சியான சூழல் நிலவி வருகிறது.

## கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்: மழை காலங்களில் கறவை மாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, நோய்தடுப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது. இது குறித்து, திட்ட ஒருங்கிணைப் பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கறவைமாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, நோய் தடுப்பு குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 14ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. விருப்பமுள்ளவர்கள், வரும், 13ம் தேதிக்குள், 04286-266 345 என்ற எண்ணில் அல்லது நேரில் தொடர்பு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## என்.சி.எம்.எஸ்.,ஸில் பருத்தி ஏலம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 2.40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 200 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,060, குறைந்த பட்சமாக, 3,610 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 2.40 லட்சம்

ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**<u>நாட்டுக்கோழி வளர்ப்பு முகாம்</u>**

நாமக்கல்: "நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் - மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 16ம் தேதி, 9 மணிக்கு நடக்கிறது. இதில், பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்கலாம். மேலும், விபரங்களுக்கு 04286 - 266 345 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>கால்நடை மருத்துவ சிறப்பு முகாம்</u>**

ராசிபுரம்: குச்சிகாடு கிராமத்தில் நடந்த கால்நடை சிறப்பு முகாமில், செயற்கை கருவூட்டல், சினை பரிசோதனை உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டது. ராசிபுரம் அடுத்த, குச்சிகாடு கிராமத்தில், மாவட்ட கால்நடைபராமரிப்பு துறை சார்பில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. துணை இயக்குனர் ரவிச்சந்திரன் தலைமையிலான மருத்துவ குழுவினர், கால்நடைகளை பரிசோதித்து மருந்து, மாத்திரை வழங்கினர். இதில், 30 மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 60 மாடுக்கு சினை பரிசோதனை, 540 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. மேலும், 44 செம்மறி ஆடுகள், 498 வெள்ளாடுகள், 190 கோழிகளுக்கு, நோய்

தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது. கால்நடை அலுவலர் ஆனந்தபாபு, ஆய்வாளர் மணி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் பழனியம்மாள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**<u>தென்னை உற்பத்தியாளர் கம்பெனி துவக்க விழா</u>**

ஈரோடு: உற்பத்தி பொருட்களை விவசாயிகளே, நேரடியாக விற்பனை செய்யும் வகையில், அரச்சலூர் அடுத்த, கொமாரபாளையத்தில், தீரன் தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி துவக்க விழா நடந்தது. கம்பெனி தலைவர் சசிக்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் ராமசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபைத்தலைவர் தங்கராஜ் கூறியதாவது: இடைத்தரகர்கள் இன்றி, கொப்பரைக்கு அதிக விலை பெற, ஈரோடு மாவட்டத்தில், தென்னை உற்பத்தியாளர் கம்பெனி துவக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், நேரடி விற்பனையாளராக மாற வேண்டும் என்ற நோக்கில், விவசாயிகள் குழுக்களாக இணைந்து, உற்பத்தியாளர்கள் சங்கம் துவக்கினால், மத்திய, மாநில அரசுகள், மானியம் மற்றும் கடன் வசதியை வழங்குகிறது. ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள், கரும்பு சாகுபடியை தொடர்ந்து, தென்னை வளர்ப்பும், பவானிசாகர், சத்தியமங்கலம், சென்னிமலை, முத்தூர், பெருந்துறை போன்ற பகுதிகளில் அதிகம் வளர்க்கப்படுகிறது. விவசாயிகளிடம் தேங்காயை, பத்து ரூபாய்க்கு வாங்கி, வெளிச்சந்தையில், 15 முதல், 20 ரூபாய் வரைக்கும் வியாபாரிகள் விற்கின்றனர். லாபத்தை நேரடியாக விவசாயிகளே பெறும் வகையில், விவசாயிகளே, விற்பனையாளராக மாற வேண்டும் என, அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படும், 1,000 விவசாயிகளும் பங்குதாரர்கள் ஆவர். வரும், லாபம் பகிர்ந்தளிக்கப்படும்.

உற்பத்தியாளர்கள் சங்கங்கள், வேளா ண் கருவிகள், குடோன், அலுவலகம் துவங்க அரசு கடனுதவி வழங்குகிறது. தற்போது, 200 விவசாயிகள், சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இதுபோன்ற அனைத்து பயறு மற்றும் தானிய உற்பத்தி விவசாயிகளும், குழுக்களாக இணைந்து, சங்கம் உருவாக்கினா ல், வருங்காலத்தில் விவசாயிகளு ம், நுகர்வோர்களும் நேரடி பயØ ன அனுபவிக்க முடியும், என்றார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சந்தானம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>மருத்துவ குணமிக்க 'முள்ளு சீத்தா' சீசன் துவக்கம்</u>**

பந்தலுார் : மருந்துவ குணம் கொண்ட, 'முள்ளு சீத்தா' பழ சீசன், பந்தலுாரில் துவங்கியது.இந்த பழம், அமேசான் மழைக்காடுகளிலும், கரீபியன் மற்றும் மத்திய அமெரிக்காவிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவலாக விளைகிறது. இதில், பலா பழத்தில் உள்ளது போன்று முட்கள் காணப்படுவதால், 'பலா ஆத்தா' என்றும், கேரளாவில் 'அத்திகா' என்றும் அழைக்கப்படுகிறது.மூலிகை செடிகள் ஆய்வாளர் சிவதாஸ் கூறுகையில், "முள்ளு சீத்தா பழம் புற்றுநோயை கட்டுப்படுத்த கூடியதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் இலைகளை காய்ச்சி குடிக்கலாம். தற்போது, கேரளா மாநிலம், மானந்தவாடியில், இதன் நாற்று, 600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பழங்கள் அரை கிலோ 4000 ரூபாய் வரை விலை போகிறது," என்றார்.

**<u>இஞ்சிக்கு ஊடுபயிராக பச்சைமிளகாய்</u>**

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் இஞ்சி செடிக்கு ஊடுபயிராக, பச்சைமிளகாய் விவசாயம் மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பந்தலுார் பகுதியில் தேயிலை, காய்கறி விவசாயம் மட்டுமின்றி, இஞ்சி, மஞ்சள், நேந்திரன் வாழை போன்ற விவசாயங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தற்போது காபி தோட்டங்களிலும், சதுப்பு நிலங்களிலும்

இஞ்சி விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஊடுபயிராக பச்சைமிளகாய், பீன்ஸ் போன்ற விவசாயங்களும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால், இஞ்சி பயிருக்கு போடும் உரம் அனைத்து விவசாயங்களுக்கும் பயன்படுவதால் உரமிடுதல், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதில் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. இதனால், இஞ்சி விவசாயத்துடன் மேற்கொள்ளப்படும் ஊடுபயிர் விவசாயம், அதிகரித்து வருகிறது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்;

ஊட்டி : ஊட்டியில், வரும் 17ம் தேதி, விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட உள்ளது.நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 17ம் தேதி, காலை 10:30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமையில் நடத்தப்பட உள்ளது. மாவட்ட விவசாயிகள், விவசாயம் தொடர்புடைய குறைகளை புகாராக எழுதி, "தோட்டக்கலை இணை இயக்குனர், த.பெ., எண்.72, ஊட்டி - 643 001' என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு, மணி கூறியுள்ளார்.

## காவிரி - குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டம் : விவசாயிகள் கோரிக்கையால் "ரீ" சர்வே பணி

கரூர்: காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டத்துக்கு, 258 கிலோ மீட்டர் தூரம் கால்வாய் வெட்டும் திட்டத்துக்கான சர்வே எடுக்கும் பணி சமீபத்தில் முடிக்கப்பட்டது. வாய்க்கால் இணைப்பு திட்டத்தை "ரீ" சர்வே செய்ய வேண்டும் என்ற, விவசாயிகளின் கோரிக்கைØயால், மீண்டும் "ரீ" சர்வே பணி நடக்கிறது. சேலம், கரூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களின் நீராதாரமாக மேட்டூர்

அணை உள்ளது. கர்நாடகாவில் இருந்து, மேட்டூர் அணைக்கு வரும் காவிரி நீர், கரூர் மாயனூர் தடுப்பணை, வெண்ணாறு, கல்லணை வழியாக செல்கிறது. காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு திட்டத்தை அடிப்படையாக கொண்டு, காவிரி ஆற்றில் வரும் உபரி நீரை வீணாகாமல் இருக்கும் வகையிலும், தமிழகத்தில் நதிகளை இணைக்க முன்னோடியாக, தேசிய மேம்பாட்டு முகமை உள்நாட்டு நதிகள் இணைக்கும் திட்டத்தில், 254.45 கோடி ரூபாய் மதிப்பில், மாயனூர் தடுப்பணை கட்டப்பட்டது. கடந்த, 1924ம் ஆண்டு காவிரில் நான்கு லட்சத்து, 63 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேறிதாக புள்ளிவிவரம் உள்ளது. அதற்கு பிறகு, அவ்வளவு தண்ணீர் செல்லவில்லை. அணையின் மூலம், 1.05 டி.எம்.ஸி., தண்ணீர் வெளியேற்ற முடியும். ஆறுகள் இணைப்பு திட்டத்தின் மூலம், காவிரியில் இருந்து கிடைக்கும் உபரி நீரை, மாயனூர் கட்டளை கதவணையில் இருந்து, 258 கிலோ மீட்டர் தூரம் இணைப்பு கால்வாய் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இணைப்பு வாய்க்கால் மூலமாக சிற்றாறுகளான அரியாறு, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை, கிருதுமால் நதி மற்றும் குண்டாறு வரையிலான பகுதிகள் பயன்பெறும். இதற்கான திட்ட மதிப்பீடு, 5.166 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டது. மத்திய அரசின் வெள்ள மேலாண்மை திட்டத்தின் கீழ், திட்டத்தை செயல்படுத்த அரசு பரிந்துரை செய்ததே தவிர, மத்திய அரசு நிதியுதவி வழங்கவில்லை. இதற்கிடையில் மாநில அரசு நிதியுதவியுடன் திட்டத்தை செயல்படுத்துவதற்காக பொதுப்பணி துறையின் திட்ட வடிவமைப்பு துறையின் சார்பில், கரூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சர்வே பணி நடத்தப்பட்டது. இணைப்பு வாய்க்கால் சர்வே பணியை "ரீ" சர்வே செய்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில் திட்டத்தை மாற்ற வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையின்

அடிப்படையில், திருச்சி உள்ளிட்ட இடங்களில் அதிகாரி குமார், தலைமையிலான குழுவினர் மறு சர்வே செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நல சங்க செயல் தலைவர் ராஜாராம் கூறுகையில், "காவிரி- வைகை - குண்டாறு இணைப்பு திட்டத்துக்கு, 258 கிலோ மீட்டர் தூரம் கால்வாய் வெட்டும் திட்டத்துக்கான சர்வே எடுக்கும் பணி சமீபத்தில் முடிக்கப்பட்டது. வாய்க்கால் இணைப்பு திட்டத்தை "ரீ" சர்வே செய்ய வேண்டும் என, கரூர் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். கரூர் மாவட்டத்தில் இது சாத்தியமில்லை என, அதிகாரிகள் தெரிவித்து விட்டனர். திருச்சி, மதுரை உள்ளிட்ட இடங்களில் ஒரு சில இடங்களில் மறு சர்வே செய்யும் பணி நடக்கிறது. திட்டம் நிறைவேற்றப்பட்டால், கரூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்கள் பயன்பெறும்,' என்றார்.

**<u>பழநியில் பயறு, நெல் விதைகள் மானிய விலையில் வினியோகம்</u>**

பழநி : பழநி விவசாயிகளுக்கு நெல் மற்றும் பயறுவகை விதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. பழநிபகுதியில் பரவலாக நல்ல மழை பெய்துவருகிறது. மானாவாரி நிலங்களில் குறைந்த வயதுடையதும், சாகுபடி செலவு அதிகமில்லாத வருவாய் தரக்கூடிய பயறுவகைகளை சாகுபடி செய்யலாம் என வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். பழநி வேளாண்மை விரிவாக்க மையத்தில். பயறுவகை விதைகள் 50 சதவீத மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும் ஆயக்கட்டு பாசன சாகுபடிக்கேற்ற குறுகியகால வயதுடைய நெல்லான ஆடுதுறை(2) 45 (ஏ.டி.டி.ஆர்.45) பழநி, பாப்பம்பட்டி நெய்க்காரப்பட்டியிலுள்ள வேளாண் துணை விரிவாக்க மையங்களில் இருப்புவைத்து வினியோகம் செய்யப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி விவசாய அலுவலர்களிடம் விண்ணப்பங்களை பெற்று பூர்த்திசெய்து, மானிய விலையில் விதைகள் பெற்று பயன்பெறலாம் என வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் மகிழ்ச்சி! முதல் போக அறுவடை துவங்கியது

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக அறுவடை துவங்கியுள்ளது. நல்ல விலையும் கிடைப்பதால் விவசாயிகள் ஆர்வமுடன் அறுவடையில் இறங்கியுள்ளனர்.கம்பம் பள்ளத்தாக்கில் கடந்த சில ஆண்டுகளாக இருந்த தேக்கநிலை இந்த ஆண்டு நீங்கியுள்ளது. முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் திருப்திகரமாக உள்ளது. மழையும் பெய்து வருகிறது. எனவே இரண்டாம் போக நெல் சாகுபடியில் எந்த பிரச்னையும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை. கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடவு செய்த முதல் போக நெல் சாகுபடியில் கடந்த சில நாட்களுக்கு முன் அறுவடை பணியில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். கம்பம் பகுதியில் சாமாண்டிபுரம், மஞ்சகுளம், ஆங்கூர்பாளையம், கம்பம் சின்னவாய்க்கால் பகுதிகளில் அறுவடை தீவிரம் அடைந்துள்ளது. அத்தோடு இரண்டாம் போகத்திற்கான நாற்றங்கால் அமைக்கும் பணியிலும் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். மேலும் அறுவடையாகும் நெல்லுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. 60 கிலோ கொண்ட மூடை க்கு ரூ. 900 வரை விலை கிடைத்து வருகிறது. அரசின் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாத நிலையில் தனியார் வியாபாரிகள் முகாமிட்டு நெல் கொள்முதல் செய்து வருகின்றனர்.முன்னோடி விவசாயி எலுமிச்சை முருகன் கூறுகையில், " முதல் போக அறுவடை துவங்கியுள்ளது. விவசாயிகள் திருப்தியாகும் நிலையில் மகசூல் மற்றும் விலை கிடைத்துள்ளது. குழிக்கு 30 மூடை கிடைத்துள்ளது. இரண்டாம் போகத்திற்கான நாற்றாங்கால் அமைக்கும் பணிகளும் நடக்கிறது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் தொடர்ந்து அறுவடை துவங்க உள்ளது,' என்றார்.

## பாபநாசம் அணை நீர் விவசாயத்திற்கு இன்று திறப்பு

திருநெல்வேலி : நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் விவசாயத்திற்காக

இன்று பாபநாசம் அணை திறக்கப்படுகிறது.திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 86 ஆயிரம் ஏக்கரில் பிசான நெல் சாகுபடிக்கான நடவுப்பணிகள் துவங்க உள்ளன. எனவே விவசாய பணிகளுக்காக இன்று 10ம் தேதி பாபநாசம் அணை திறக்கப்படுகிறது. கலெக்டர் கருணாகரன் முன்னிலையில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாய சங்கத்தினர் பங்கேற்கின்றனர்.

**நாகர்கோவிலில் கொட்டி தீர்த்த மழை**

நாகர்கோவில் : நாகர்கோவிலில் கொட்டி தீர்த்த மழையால் ரோடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. நாகர்கோவில் நகரில் வெப்பம் அதிகரிப்பால் ரோட்டோரங்களில் புதிதுபுதிதாக குளிர்பான கடைகள் அதிகமாகி வந்தது. மதிய நேரங்களில் வழக்கத்தை விட மக்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்து வந்தது. நேற்றும் பகல் ஒரு மணி வரை அதிக வெயில் அடித்தது. அதன் பின்னர் காலநிலை மாறியது. பகல் 2.30 மணி வாக்கில் ஆலங்கட்டி மழை போல கட்டிதுளிகளாக மழை பெய்தது. சிறிது நேரத்தில் வலுத்த மழை ஒரு மணி நேரம் கொட்டி தீர்த்தது. இதனால் செம்மாங்குடி ரோடு, பெண்கள் கிறிஸ்த கல்லூரி ரோடு, செட்டிக்குளம், மணிமேடை போன்ற இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சிறிய கார்கள், ஆட்டோக்கள் செல்ல முடியாத அளவு தண்ணீரின் மட்டம் அதிகமாக இருந்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஒரு மணி நேரத்துக்கு பின்னர் மழை குறைந்த பின்னர்தான் ரோடுகளில் வெள்ளப்பெருக்கு குறைந்தது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கோகோ சாகுபடி பயிற்சி</u>

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் முந்திரி மற்றும் கோகோ சாகுபடி பற்றிய 3 நாள் தொழில்நுட்ப பயிற்சி தொடங்கியது. பயிற்சியை நிலைய தலைவர் சோழன் நேற்று முன்தினம் தொடங்கி வைத்து கோ கோ பயிரின் முக்கியத்துவம் பற்றி பேசினார். உதவி பேரசிரியர் சிவக்குமார் வரவேற்றார். வாசனை மற்றும் மலைத்தோட்டப்பயிர் துறை தலைவர் ஜான்சிராணி மற்றும் நிலைய விஞ்ஞானிகள் கலந்து கொண்டு கோகோ சாகுபடி பற்றி விளக்கினர். உதவி பேராசிரியர் காமராஜ் நன்றி கூறினார். புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோ கோ பயிரினை நேற்று பார்வையிட்டனர். பயிற்சியில் டெல்டா மாவட்டங்களிலிருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். இன்று பயிற்சி நிறைவடைகிறது.

### <u>திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 650 மெ.டன் குறுவை நெல் கொள்முதல்</u>

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 650 மெ.டன் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட 64 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான குறுவை பயிர் கள் தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் வரை சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் அறுவடை

முடிந்துள்ளது.  விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டத்தில் உள்ள 7 தாலுகாக்களிலும் மொத்தம் 52 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கடந்த 1ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம் நேற்று வரை 650 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரகத்திற்கு குவின்டால் ஒன்றுக்கு ரூ. 1,470, பொது ரகத்திற்கு ரூ.1,410 வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று தேவைப்படும் இடங்களில் அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கவும் நடவடிக்கை எடுக்கப் படும். கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அது குறித்து முதுநிலை மண்டல மேலாளர் கைபேசி எண் 9442255542 என்ற எண் ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். மேலும் குடவாசல் தாலுகாவில் உள்ள ஆலத்தூர் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மற்றும் நன்னிலம் தாலுகாவில் உள்ள மோட்டாத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றினை கலெக்டர் மதிவாணன் நேரில் ஆய்வு செய்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். ஆய்வின் போது நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## துவரை, தட்டைப்பயறு சாகுபடி செய்யலாம் என வேளாண் துறை அறிவுரை

நத்தம்: நத்தம் பகுதியில் தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி துவரை, தட்டைப்பயறு சாகுபடி செய்யலாம் என வேளாண் துறை தெரிவித்துள்ளது. நத்தம் பகுதியில் கடந்த சில வாரங்களாக பருவமழை பெய்து வருகிறது. இதுகுறித்து நத்தம் வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி கூறியதாவது: தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி நத்தம் வட்டார விவசாயிகள் மானாவாரியாக பயறு வகைகளை விதைப்பு செய்து

அதிக வருவாய் பெறலாம். தட்டைப்பயறு கோசிபி 7 என்ற ரகம், துவரை கோஆர்ஜி 7 என்ற ரகம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஒரு ஏக்கருக்கு 8 கிலோ தட்டைப்பயறு, துவரை ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதைப்பயறும் விதைப்பு செய்யலாம். மேலும் இதுகுறித்த விபரங்களை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் விவசாயிகள் கேட்டு பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**<u>சின்னவெங்காயம் விலை அதிகரிக்கும் : வேளாண் விற்பனை தகவல் மையம் கணிப்பு</u>**

திண்டுக்கல்: தீபாவளி பண்டிகை தேவை அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதியால் சின்ன வெங்காயத்தின் விலை நவம்பர் வரை ஏற்றத்துடனே இருக்கும் என்று வேளாண் விற்பனை தகவல் மையம் தெரிவித்துள்ளது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு காய்கறிகளின் விலை முன்னறிவிப்பு ஆய்வு செய்யப்பட்டு வெளியிடுவது வழக்கம்.இதன்படி தற்போது சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.சின்ன வெங்காயத்தின் தாயகம் மத்திய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளாகும். சின்ன வெங்காயம் தென்னிந்திய சமையலில் ஒரு முக்கியமான காய்கறி உணவாகும். இந்தியாவின் மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் தமிழ்நாடு 90 சதவீத பங்களிப்பையும், கர்நாடகா 10 சதவீத பங்களிப்பையும் அளிக்கிறது.தற்போது திண்டுக்கல், கரூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து வரத்து உள்ளது. நல்ல தரமான சின்ன வெங்காயம் கிலோ ரூ.25 முதல் ரூ.40 வரை திண்டுக்கல் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வர்த்தகர்களின் கூற்றுப்படி புரட்டாசிப்பட்ட விதைப்பிற்கு தேவையான விதைப்பு சின்ன வெங்காயத்தின் தேவை மற்றும்

வரும் மாதங்களில் பண் டிகை, தேவை அதிகரிப் பால் சின்ன வெங்காயத் தின் விலை நவம்பர் வரை ஏற்றத்துடனே இருக்கும்.விவசாயிகள் வெங்காய விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, கடந்த 16 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்தது.அதனடிப்படையில் தரமான சின்ன வெங்காயத்தின் விலை அக்டோ பர்நவம்பர் மாதங்களில் கிலோ ரூ.30 முதல் 35 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.சின்ன வெங்காயத்தின் ஏற்றுமதி தேவையினாலும் விலை உயர வாய்ப்புள்ளது. டிசம்பர் மாதத்திற்கு பிறகு விலையேற வாய்ப்பில்லாததால் விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை உடனே விற்று பலனடையலாம் என்று மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

## <u>சிவகங்கை மாவட்டத்தில் விவசாய பணிகள் தீவிரம்</u>

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் கன மழை பெய்து வருவதையடுத்து விவசாய பணிகள் தீவரிமடைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 1 லட்சத்து 20ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அதிகப்படியாக நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறை கண்மாய்கள் 716, ஒன்றிய கண்மாய்கள் 4188 உள்ளன. இந்நிலையில் கடந்த மாதம் பெய்த மழையால் மாவட்டத்தின் சில பகுதிகளில் விவசாய பணிகள் தொடங்கப்பட்டது. இந்நிலையில் நடப்பு மாத தொடக்கத்தில் இருந்து மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கன மழை பெய்ய தொடங்கியுள்ளதால் விவசாயிகள் விவசாயத்திற்கான ஆரம்பகட்ட பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த மாத தொடக்கத்தில் இருந்து மாவட்டத்தில் அதிகபட்சமாக திருப்புவனம் மற்றும் திருப்பத்தூரில் 78.2மி.மீ மழை பெய்துள்ளது. மானாமதுரையில் 23.5மி.மீ, சிவகங்கையில் 70மி.மீ,

தேவகோட்டையில் 52மி.மீ, இளையான்குடியில் 23மி.மீ மட்டுமே மழை பெய்துள்ளது. காரைக்குடியில் 39மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதையடுத்து மாவட்ட முழுவதும் உழவு விதைப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நாற்றங்கால் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.திருப்புவனம், காரைக்குடி, மானாமதுரை, சிவகங்கை, காளையார்கோவில் பகுதிகளில் விவசாயத்திற்கான முதற்கட்ட பணிகளை விவசாயிகள் செய்துள்ளனர். இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி கூறுகையில்,‘ தென்மேற்கு பருவமழை பெய்திருந்தால் ஆடி மாதத்தில் விதைப்பு பணி தொடங்கியிருக்கும். ஆனால் மழை இல்லாததால் விதைப்பு பணி நடக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயத்திற்கான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கி போதிய மழை இல்லாமல் அவைகள் வீணாகிப்போனது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் நஷ்டம் ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது பெய்துள்ள மழையால் விவசாய பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே இந்த ஆண்டு விவசாயம் பொய்க்காமல் போதிய விளைச்சல் கிடைக்கும். வேளாண் அலுவலகங்களில் தரமான விவசாய இடுபொருட்களை போதிய அளவில் இருப்பு வைத்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## சீர்காழி பகுதியில் திடீர் மழை

சீர்காழி, : சீர்காழி அருகே உள்ள வைத்தீஸ்வரன்கோயில், திருவெண் காடு, சட்டநாதபுரம், தென்னலக்குடி, செம்மங்குடி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மதியம் திடீரென்று இடி மின்னலுடன் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சுமார் 1 மணி நேரம் நீடித்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.சுட்டெரித்த வெயிலில் தவித்த சீர்காழி பகுதி மக்களுக்கு இந்த மழை குளிர்ச் சியை அளித்துள்ளது. மேலும் சம்பா நடவு

பணியை தொடங்கி தண்ணீர் இல்லா மல்  காய்ந்த வயல்களுக்கு இந்த மழை பலனை தரும். மழை மேலும் தொடர்ந்தால் சம்பா நடவு பணி முழுவீச்சியில் நடைபெற வாய்ப்பு உள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>மழைத்துளி, மழைத்துளி மண்ணில் சங்கமம்</u>

விண்ணின் மழைத்துளி, மண்ணின் உயிர்த்துளி என்ற வகையில் மழைவளம் இருந்தால்தான், ஒரு நாடு அனைத்து வளங்களையும் பெற்று செழிக்க முடியும். உலகில் கண்டுபிடிப்புகள் மூலம் மனிதனுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் உருவாக்கிவிடமுடியும். ஆனால், நீரும், காற்றும் மட்டும் மனிதனின் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு, இயற்கையின் அருட்கொடையை நம்பியே வாழவேண்டிய கட்டாயம் இருக்கிறது. மழைத்துளி, மழைத்துளி மண்ணில் சங்கமம் என்ற வகையில் விண்ணை அண்ணார்ந்து பார்த்து அங்கு இருந்து மழை கொட்டாதா?, வாழ்வுவளம் பெறாதா? என்று ஏக்கப்பார்வையோடுதான் சமுதாயம் வாழ்கிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டுக்கு தென்மேற்கு பருவமழை ஓரளவுக்கும், வடகிழக்கு பருவமழை பெருமளவுக்கும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்கிறது. தமிழ்நாட்டில் தென்மேற்கு மழையின் பலன் பெரிய அளவுக்கு நிறைவு தராவிட்டாலும், ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரை உள்ள 4 மாதங்களில் பெய்யும் இந்த மழையால் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம், ஆந்திரா மாநிலங்களில் அதிகமாக பெய்யும். அங்கு இந்த மழை அபரிமிதமாக பெய்தால் தமிழ்நாட்டுக்கும் வரும். எடுத்துக்காட்டாக,

கர்நாடகத்தில் நல்ல மழை பெய்தால் மேட்டூர் அணைக்கும், ஆந்திராவில் நல்ல மழை பெய்தால் சென்னைக்கும், கேரளாவில் நல்ல மழை பெய்தால் முல்லை பெரியாறு அணைக்கும் தண்ணீர் நிறையவரும். இந்த ஆண்டு தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை குறைவாகவே பெய்து இருக்கிறது. சாதாரணமாக ஏறத்தாழ 40 சென்டிமீட்டருக்கு மேல் மழை பெய்ய வேண்டும். ஆனால், இப்போது 30 சென்டி மீட்டர்தான் பெய்திருக்கிறது. கோவை, சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், நீலகிரி, தேனி ஆகிய 6 மாவட்டங்களில் கூடுதலான மழையும், எங்கு அதிகம் தேவையோ அந்த மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி, மதுரை உள்பட 13 மாவட்டங்களில் மிகக்குறைவான மழையும் பெய்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தென்மேற்கு பருவகாலம் முடிந்த பிறகும், சில இடங்களில் தொட்டுக்கோ, துடைத்துக்கோ என்பது போல, அதன் மிச்சம் மீதி தாக்கத்தால் ஆங்காங்கு கொஞ்சம் கொஞ்சம் மழை பெய்து கொண்டிருந்தாலும், அதனால் பெரிய பலன் கிடைத்து விடப்போவதில்லை.

இந்த நிலையில், இந்த மாதம் 20–ந் தேதி முதல் டிசம்பர் மாதம் வரை பெய்யப்போகும் வடகிழக்கு பருவ மழைதான் நம்பிக்கை நட்சத்திரமாக தமிழக மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ஆண்டில் தமிழ்நாட்டுக்கு 92 சென்டிமீட்டர் மழை பெய்தால் சராசரி மழை என்பார்கள். இதில் 50 சதவீதத்துக்கு மேல் வடகிழக்கு மழையால்தான் கிடைக்கும். பொதுவாக இந்த மழை மக்களை ஏமாற்றிவிடுவதில்லை. ஆனால், கடந்த ஆண்டு மட்டும் இந்த மழை பொய்த்து மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. பொதுவாக 3, 4 நாட்கள் தொடர் மழை அடிக்கடி கொண்டுவரும். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை கடந்த ஆண்டைப்போல காலை வாரிவிடாது. பெருமழை பெய்யாவிட்டாலும், போதுமான மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சித் துறை அறிவித்திருப்பது மக்களை ஆனந்த மழையில் குளிக்க வைத்துவிட்டது. ஆனால், பெய்யும் மழை தண்ணீரை

வீணாக்காமல் சேமித்து வைத்தால்தான், அடுத்த ஆண்டு முழுவதும் பலனளிக்கும். அந்த வகையில், அடுத்த சில நாட்களுக்குள் மழைநீர் சேகரிப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். ஏற்கனவே இந்த வசதியுள்ள இடங்களில் பராமரிப்பு பணிகளை வேகமாக மேற்கொள்ள வேண்டும். ஏரிகள், குளங்களின் கரைகளை பலப்படுத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மழைநீர் வடிகால் வசதிகளை உடனடியாக சீரமைத்து, அந்த நீரெல்லாம் எங்காவது கோவில் குளங்கள் உள்பட குளம் குட்டைகளில் போய் விழ ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம். மாநிலம் முழுவதிலும் உள்ள கசிவுநீர் குட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய தருணம் இது. வருண பகவான் வாரி வழங்கப்போகும் மழை தண்ணீரை வீணாக்காமல் சேமித்து சிக்கனமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மட்டுமல்லாமல், அனைவரும் எடுக்க சபதம் மேற்கொள்வோம்.

## கர்நாடகாவில் பலத்த மழை எதிரொலி: ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: வெள்ள அபாய எச்சரிக்கை

கர்நாடகாவில் பலத்த மழை பெய்வதால் ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தென் பெண்ணை ஆற்று கரை யோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. நீர்வரத்து அதிகரிப்பு கர்நாடகாவில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ஓசூர் அருகே உள்ள கெலவரப் பள்ளி அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. கெலவரப்பள்ளி அணையின் மொத்த கொள்ளவு 44.26 அடியாகும். அணையின் நேற்றைய நீர்மட்டம் 42.28 அடியாகும். அணைக்கு வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஓசூர் கெலவரப் பள்ளி அணையில் இருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேற்றப்படுவதால்

தென்பெண்ணை ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக ஓசூர் தொரப்பள்ளி அக்ரஹாரம், முத்தாலி, உலகம், பாத்த கோட்டா மற்றும் சுற்று வட் டார பகுதிகளில் தென் பெண்ணை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ள அபாய எச்சரிக்கை குறிப்பாக பாத்தகோட்டா, உலகம் ஆகிய கிராமங்களில் உள்ள தரைப்பாலங்கள் தண்ணீரில் மூழ்கி உள் ளது. இதனால் அந்த பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளார்கள். ஓசூர் கெலவரப் பள்ளி அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவ்வாறு தண்ணீர் வரும் போது அதிக அளவில் தண் ணீர் திறந்து விட வாய்ப்பு உள்ளது. இதனால் தென் பெண்ணை ஆற்று கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. அவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

## மஞ்சூரில் தொடர் மழை: தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல் பச்சை தேயிலை மகசூல் பாதிப்பு

மஞ்சூரில் பெய்து வரும் தொடர் மழை காரண மாக தேயிலை செடிக ளில் கொப்புள நோய் தாக்குதல் ஏற்பட்டு உள் ளது. இதனால் பச்சை தேயிலை மகசூல் பாதிக் கப்பட்டு உள்ளது.

கொப்புள நோய் தாக்குதல்

மஞ்சூர், எடக்காடு, எமரால்டு, பிக்கட்டி, தாய்சோலை, கிண்ணக்கொரை, மணியட்டி, மீக்கேரி உள்பட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக் கான விவசாயிகள் தேயிலை விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த நிலையில் மஞ்சூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் எமரால்டு, அப்பர் பவானி, அவலாஞ்சி உள்பட பல்வேறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

தொடர் மழை காரணமாக மஞ்சூர் பகுதியில் உள்ள தேயிலை செடிகளில் கொப் புள நோய் தாக்கி வருகிறது. இதனால் பச்சை தேயிலை மகசூல்

குறைந்து உள்ளதால் விவ சாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

மகசூல் குறைவு

மேலும் அனைத்து செடி களுக்கும் கொப்புள நோய் பர வாமல் தடுக்க மருந்து தெளிக் கும் பணியில் விவசாயிகள் ஈடு பட்டு உள்ளனர்.இதுகுறித்து எடக்காடு பகுதியை சேர்ந்த விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது:- மஞ்சூரில் பருவமழை தொடங்கும் முன்பு தேயிலை தொழிற் சாலைகளுக்கு நாள் ஒன்றுக்கு 40 ஆயிரம் கிலோ பச்சை தேயிலை வினியோகம் செய் தோம். இந்த நிலையில் மஞ்சூரில் பெய்த தொடர் மழை யால் தற்போது தேயிலை செடிகளில் கொப்புள நோய் ஏற்பட்டு உள்ளது. இதன் கார ணமாக பச்சை தேயிலை மகசூல் குறைந்து உள்ளது. இதனால் தேயிலை தொழிலாளர்களுக்கு வேலை யிழப்பு ஏற்பட்டு உள்ளதோடு சிறு விவசாயிகளுக்கு வருமான இழப்பும் ஏற்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

## <u>தீர்த்தாண்டதானத்தில் 56 மி.மீ. மழை</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஆங் காங்கே மழைபெய்து வருகிறது. இந்த நிலையில் அந்தமான் பகுதியில் 250 கிலோ மீட்டர் தொலைவில் குறைந்த காற்ற ழுத்த தாழ்வுநிலை உருவாகி வடமேற்கு நோக்கி நகர தொடங்கி உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுநிலை அதி தீவிர புயலாக மாறி வருகிற 12–ந்தேதி கரையை கடக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாம் பன் துறைமுக அலுவலகத்தில் 2–வது எண் புயல் கூண்டு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் பாம்பன், தொண்டி, தீர்த் தாண்டதானத்தில் மட்டும் மழை பெய்தது. நேற்றுகாலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மாவட்டத்தில் பெய்த மழைஅளவு மில்லி மீட்டரில் வருமாறு:– பாம்பன்–8, தொண்டி–0.20, தீர்த்தாண்டதானம்–56. மாவட்டத் தில் சராசரியாக 4 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## தோட்டத்தில் காய்த்த அதிசய வடிவ பப்பாளி

சிங்கம்புணரியை சேர்ந்தவர் இளம்பரிதி கண்ணன். தென்னை விவசாயியான இவரது தோட்டத்தில் உள்ள ஒரு பப்பாளி மரத்தில் விளைந்த பப்பாளிப்பழம் ஒன்று வித்தியாசமான தோற் றத்தில் உள்ளது. அதாவது ஒரு பக்கம் அன்னப்பறவையை போன்றும், மற்றொரு பக்கம் பார்த்தால் யானையின் முகம் போல வும் உள்ளது. பெரும் பாலும் தேங்காய்கள்தான் இதுபோன்று விழுதுகளுடன் காய்க்கும். அப்படி காய்க்கும் தேங்காய்களை பூஜை செய்து வழிபடுவர். தற்போது பப் பாளிப் பழம் அதே போல் விளைந்துள்ளது. இந்தப் பழத்தை இளம்பரிதி கண்ணன் தனது குடோனில் உள்ள பூஜை அறையில் வைத்துள் ளார். அதனை அங்கு வருப வர்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்து நிவாரணம் வழங்க வேண்டும் உதவி கலெக்டரிடம் கோரிக்கை

பாதிக்கப்பட்ட விவசா யிகளுக்கு வயல்களை அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் பாதிப்பு திருவண்ணாமலை மாவட் டம் செய்யாறு உதவி கலெக் டர் அலுவலகத்தில் தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு உதவி கலெக்டர் எம்.ஆர்த்தி தலைமை தாங்கி னார். நேர்முக அலுவலர் ரவிச்சந்திரன், தாசில்தார் கோபால்சாமி, சமூக பாது காப்பு தாசில்தார் பாலகிருஷ் ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பலரும் கலந்து கொண்டு தங்களின் குறைகள் குறித்து பேசுகையில் விவசாயத்திற்கு கிணறுகள் ஆழப்படுத்திட வெடிபொருட் கள் அரசு வழங்கிட வேண்டும், கடும் வறட்சியால் கரும்பு சாகுபடி 70 சதவீதம் காய்ந்து சேதமடைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நிவாரணம் வழங்க வேண்டும். வயல்களை அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட

விவசாயிக ளுக்கு உடனடியாக நிவராணம் வழங்கிட வேண்டும். தாலுகாவில் உள்ள ஏரிகள் பராமரிப்பு பணியில் பொதுப் பணித்துறையினர் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும். கடுமையான வறட்சி நில வும் சூழ்நிலையில் வங்கியில் பெற்ற நகை கடனை திருப்பி கட்டமுடியாத நிலையில் விவசாயிகளின் நகைகளை ஏலம் விடுவதை தடுத்து நிறுத் திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். முடிவில் விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என உதவி கலெக்டர் எம்.ஆர்த்தி தெரிவித்தார். கூட்டத் தில் தொடக்க வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி, மின் வாரிய உதவி செயற்பொறி யாளர் பெருமாள், பொறியாளர் வள்ளிகாந்தன் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.